01 FEB 2000
மாநகராட்சி மன்றம்
10 FEB 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 27 வியாழக்கிழமை ( 10 - 02 - 2000 ) VALAMPURI ஒலி: 53

## கச்சேரி - நல்லூர் வீதியில்

# 'கிளைமோர்' வெடித்தது

# 3பொலிஸ் பலி! 7பேர் காயம்!!

## உழவு இயந்திரம் சேதம்

(அலுவலகச் செய்தியாளர்)

யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் மூன்றுபொலிசார் கொல்லப்பட்டனர் ஏழு பொலிசார் படுகாயமடைந்த நிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பொலிஸாரில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்டநாள் இடைவெளிக்குப் பின் இத்தகைய சம்பவம் நேற்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது-

நேற்றுக்காலை 9மணியளவில் கச்சேரி நல்லூர் வீதியில் உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருந்த பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர். ஏழு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த பொலிஸார் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், இவர்களை இன்று கொழும்பிற்கு அனுப்பி வைப்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை கிளைமோர் தாக்குதல் சம்பவத்தையடுத்து சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டதுடன் தாக்குதல் நடந்த பகுதி இராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. [ந4,59)

## கைத்துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

கொழும்பு - கொட்டாஞ்சேனை புளுமண்டல் வீதியில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் கைத்துப்பாக்கி ஒன்றை பயங்கரவாத தடுப்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் எடுத்துள்ளனர்.

வவுனியாவில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் கொடுத்த தகவலை அடுத்தே இத் துப்பாக்கி கண்டெடுக்கப்பட்டது, இது தொடர்பாக இந்துக்கோவில் ஐயர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் [வ]

## யாழ்ப்பாணத்தில் இரு இளைஞர் கைது மனித உரிமை ஆணைக்குழுவில்முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் நேற்று இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாகமனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டைச் சேர்ந்த பாக்கியநாதன்ஜெயக்குமார்[18வயது விக்னேஸ்வரா வித்தியாலயம், யாழ்ப்பாணம் என்னும்மாணவனே இராணுவத்தினரால் நேற்று நல்லூரில் வைத்துக் கைது செய்யப்பட்டவராவார்.

தாவடி முருகன்கோவிலடி கொக்குவிலைச் சேர்ந்த அம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறைச்சாலை பாதுகாப்புஅலுவலர் பதவிஏற்பர்

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலை பாதுகாப்பு அலுவலர்களாக 10பேர் இம்மாதம் 12ம் திகதி கடமையேற்க உள்ளதாக யாழ். சிறைச்சாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், மேற்படி 10பேருக்கான நேர் முகப்பரீட்சை கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதையடுத்து களுத்துறைச் சிறைச்சாலையில் இவர்களுக்கு ஒரு மாத பயிற்சி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (க)

## கொழும்பு பஸ் குண்டுவெடிப்புச் சம்பவம் 7தமிழ் இளைஞர் கைதுசெய்யப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்புபுறக்கோட்டை, வத்தளை ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ்குண்டு வெடிப்பை ஒட்டி 7 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை பஸ் குண்டு வெடிப்பு தொடர்பாக 5 பேரும்' வத்தளைக் குண்டு வெடிப்புத் தொடர்பாக 2 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இக்குண்டு வெடிப்பின்போது காயமடைந்தவர்கள் றாகம, கொழும்பு பெரியாஸ்பத்திரி ஆகிய வைத்தியசாலைகளில் சிசிச்சைபெற்று வருகின்றனர்

## காங்கேசன் தடுப்பு முகாமில் மூன்று பெண்கள் உட்பட எட்டுபேர் தடுத்துவைப்பு

[யாழ்ப்பாணம்]

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அதிகாரி, சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா நேற்று காங்சன்துறை சென்று தடுப்பு முகாமில் உள்ள கைதிகளைப் பார்வையிட்டார்,

காங்கேசன் தடுப்பு முகாமில் தற்போது மூன்று பெண் கைதிகள் உட்பட எட்டுப் பேர் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா கைதிகளுக்கு அவர்களின் உறவினர்களால் வழங்கப்பட்ட உணவுப் பார்சல்களையும், கடிதங்களையும் வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

## மத்திய வங்கி குண்டுவெடிப்பு வழக்கு மே10,11,12ம்திகதிகளுக்கு ஒத்திவைப்பு

மத்திய வங்கி குண்டு வெடிப்புத் தொடர்பாக வேலுப்பிள்ளை பிரபாகரன், உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டம்மான் உட்பட 10 சந்தேகநபர்களுக் கெதிரான வழக்கு விசாரணை மேமாதம்10'11'12ஆம்திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி அன்று சோமவன்ச முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இன்றும் நாளையும்,4ம், 5ம் எதிரிகளான வி.பார்த்திபன், கதிர்காமத்தம்பி சிவகுமார் ஆகியோர் ஆஜர்செய்யப்படவுள்ளனர். [வ]

## அரசின் 5வது வரவுசெலவுத்திட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 5வது வரவு செலவுத்திட்ட யோசனைகளை பிரதி நிதியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எதிர்வரும் 14ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவுசெலவுத் திட்டம் மீதான விவாதங்கள் 26 நாள்கள் இடம் பெறும் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதம் இம்மாதம் 17,18,21,22, 23, 24, 25 ஆகிய திகதிகளிலும் இரண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தினால் பாதிப்புற்ற படையினருக்கு உதவ பெண் பீரங்கிப்படை பாதயாத்திரை

(கொழும்பு)

யுத்தநடவடிக்கைகளினால் கொல்லப்பட்ட, அங்கவீனமுற்ற படையினருக்கு உதவும் வகையில் இராணுவ பீரங்கிப் படைப்பிரிவின் பெண்கள் அணியினர் பாதயாத்திரை ஒன்றை 12ம் திகதி சனிக்கிழமை நடாத்த உள்ளனர்.

பாதயாத்திரை ஸ்ரீஜெயவர்த்தனபுர சனசகுழிய தடாகத்தில் இருந்து ஆரம்பமாகி பாராளுமன்ற வீதிவழியாக பாதயாத்திரை ஆரம்பித்த இடத்திற்கு வந்து சேருமென அறிவிக்கப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவின் சிறைத்தண்டனை மேல் நீதிமன்றால் இடை நிறுத்தம்

(இந்தியா)

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவியும் முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதாவிற்கு ஊழல்வழக்கில்வழங்கப்பட்ட ஒருவருட சிறைத்தண்டனையை சென்னை மேல் நீதிமன்றம் நேற்று இடை நிறுத்தி வைத்துள்ளது.

தனக்கு எதிராக வழங்கிய நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக செல்வி ஜெயலலிதா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்ட சென்னை மேல் நீதிமன்ற நீதிபதி டேவிட் கிறிஸ்ரியன் கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை வழக்கு விசாரணை முடியும் வரை இடை நிறுத்தி வைத்தார். (வ-4)

## மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை வாவியில் மீன்பிடிப்பதற்கு தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை வாவியில் இரவு நேரங்களில் மீன்பிடிப்பதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

இரவுநேர மீன்பிடித் தடை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி எம்.பி. இ. துரைராசசிங்கம் சித்தாண்டி முகாம் பொறுப்பதிகாரிலெப்டினன்ட் மகேஸிடம் தொடர்பு கொண்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கல்விக் கல்லூரிகளிற்கான வெட்டுப்புள்ளி விபரங்கள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு கல்விக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையிலான வெட்டுப்புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கணிதப்பிரிவிற்கு ஆண்களிற்கு 179 பெண்களிற்கு 167, விஞ்ஞானப் பிரிவில் ஆண்களிற்கு 233 பெண்களிற்கு 227 ஆரம்ப நெறிக்கு ஆண்களிற்கு 256 பெண்களிற்கு 258 ஆகும்.


## ஓவியக்கண்காட்சி

வடக்கு - கிழக்கு மாகாண ஓவியர்களின் ஆக்கங்கள் அகில இலங்கை ரீதியில் அறிமுகப்படுத்தப் படுவதோடு இலங்கைக்கு வெளியில் அறிமுகம் செய்வதுடன், அவற்றிற்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கமாகவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் கொழும்பில் ஓவியக்கண்காட்சியை நடாத்த எமது அமைச்சு தீர்மானித்துள்ளது.

இக்கண்காட்சியில் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்கள், சித்திர ஆசிரியர்கள், இத்துறைசார் ஓவியர்கள் பங்கு பற்றலாம். இதில் கலந்து கொள்வோருக்குரிய அறிவுறுத்தல் சம்பந்தமான விபரங்களை உங்கள் பிரதேச கல்விப் பணிமனையில் உள்ள சித்திரக்கல்வி உதவிப் பணிப்பாளர் சித்திரக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஆகியோரிடம் பெற்றுக் கொள்வதுடன் உங்களது ஆக்கங்களை பெப்ரவரி 29-ம் திகதிக்கு முன்பாக அவர்களிடம் ஒப்படைக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்,

கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,

வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.



எமது மண்ணில் காணாமல் போனோர்
பற்றிய ஓர் ஆற்றுகை

**அக்கினிப் பெருமூச்சு**

**(நாடகம்)**

தயாரிப்பு நெறியாள்கை
தே. தேவானந்த்

காலம் 12.02.2000 / 13.02.2000 நேரம் 3.30 மணி

இடம்: கைலாசபதி கலையரங்கம்
(பிரவேசம் இலவசம்)

நுண்கலைத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.



உ
சிவமயம்

**திருமண**  **அழைப்பிதழ்**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் தைத் திங்கள் 27 ஆம் நாள்(10-02-2000) வியாழக்கிழமை காலை 7.29 மணி முதல் 9.05 மணிவரை அமைந்துள்ள கும்பலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எமது கனிஷ்ட புதல்வன்
திருநிறைச் செல்வன்
**ஸ்ரீகரன் (B. Com)**
அவர்களுக்கும்

எமது ஏகபுதல்வி
திருநிறைச் செல்வி
**தயராஜினி**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு கொழும்பு குணசிங்கபுர பிரதீபா மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி த. பரராசசிங்கம்
15, 9 வதுலேன், வாசல றோட்,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு 13, Tel: 435329

திருமதி ம. சௌந்தரராசா
சௌ. தயாபரன் (சகோதரன்)
7-1/10, உம்பிச்சிபிளேஸ்,
கொழும்பு 13.

யாழ்ப்பாண வணிக நிலையம். (இரு வீட்டார் அழைப்பு) (கி/68)


## (இராசி பலன்)

10.02.2000 வியாழக்கிழமை
(தமிழுக்கு தை 27)

பஞ்சமி இரவு 7.27 வரை: ரேவதி நடுநிசி 12.10 வரை, சித்தாமிர்த யோகம், இராகு காலம் மாலை 2.35 முதல் 4.03 வரை, சுபநேரம் காலை 8.33 முதல் 10.02 வரை.

**மேடம்:**
கடும் போக்கு, பிறர் குற்றம், தொழில் மந்தம்.

**இடபம்:**
மன மகிழ்ச்சி, எதிர்பாராத விருந்தினர், தானதர்மம்.

**மிதுனம்:**
பொதுப்பணி, சாதனை முயற்சி, சகோதர அறிவுரை.

**கடகம்:**
வீண் வம்பு, அதிகாரிகள் சினம், தொழில் கவலை.

**சிங்கம்:**
குடும்பப் பகை, அயலவர் விரோதம், மனக் குழப்பம்.

**கன்னி:**
வினோத கற்பனை, அதிக செலவு, கடித உறவு.

**துலாம்:**
காரியச் சிறப்பு, உப தொழில் வருமானம், பயண ஏற்பாடு.

**விருச்சிகம்:**
குடும்பக் கஷ்டம், பணியாள் வெறுப்பு, உடல் அசதி.

**தனுசு:**
எதிரிகள் தொல்லை, குறை கேட்டல், தேவையற்ற பிரச்சினை.

**மகரம்:**
இனியது கைகூடும், கௌரவப் பதவி, சுற்றத்தவர் கேலி.

**கும்பம்:**
வீண் வர்மம், குழம்பித் தெளிதல், பொருள் இழப்பு.

**மீனம்:**
எதிர்பார்ப்பு நிறைவேறல், தொழில் உதவி, காதல் மகிழ்ச்சி.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் யூபிலி ஆண்டு சிறப்பு வழிபாடுகள்

(குருநகர்)

யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் யூபிலி 2000மாம் ஆண்டு சிறப்பு செயற்பாடுகளாக ஆலயவெளி அரங்கில் திருச்சிலுவைப்பாடு ஸ்தலங்கள் அமைக்கப்பட்டு வாரத்தில் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பொதுச்சிலுவைப் பாதைவழிபாடு நடைபெற பங்குத்தந்தை பயஸ் அடிகளார் ஒழுங்கு மேற்கொண்டுள்ளார்.

பலவருடங்களாக இயங்காமல் இருந்த வெளியரங்க மணிக்கூட்டினை திருத்தம் செய்து ஆவே மரியா பாடல் ஒலிஎழுப்பி இயங்கிவர ஆலயஇளைஞர் குழுவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். நகரமத்தியில் பணிசெய்வோர், மாணவர்களுக்காக ஞாயிற்றுக்கிழமை மதியம்12.30மணிக்கு திருப்பலி நடைபெறபங்குத்தந்தை ஒழுங்கு செய்துள்ளார். (க-34)

## இளைஞர் கைது

(அச்சுவேலி)

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த சின்னத்துரை சசிகரன் (24வயது)என்பவர் கடந்த 24ஆம் திகதி கூழாவடிப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுவிலில்உள்ள 513 வது இராணுவப் பிரிவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த நபரது கைது தொடர்பாக இராணுவத்தினரால் அவரது மனைவியிடம்ரசீது வழங்கப்பட்டுள்ளது. (க-14)

யாழ். கல்விவலய

## முறைசாராக் கல்வி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கல்வி வலய முறை சாராக் கல்வித் திட்டத்தின்கீழ் கடந்த வருடம் முறைசாராக் கல்வி போதனாசிரியர்களாக கடமையாற்றிய அனைத்து ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 15-ஆம் திகதி யாழ். கல்வி வலயத்தில் இடம் பெறுமென முறைசாராக் கல்விப் பிரிவு செயல்திட்ட அலுவலர் எஸ். சிவானந்தம் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் கடந்த வருடம் நடாத்தப்பட்ட முறைசாராக் கல்விப் பிரிவிற்கான கண்காட்சி சம்பந்தமான விடயங்கள் மற்றும் வேறு பல முக்கிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து போதனாசிரியர்களையும் அன்றைய தினம் தவறாது சமூகமளித்து தமது வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (க-14)

## மட்டக்களப்பில் 8 சமுர்த்தி வங்கிகள் விரைவில் திறக்கப்பட்டுவிடும்

### மாவட்டசமுர்த்தி உதவிஆணையாளர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக 8 சமுர்த்தி வங்கிகள் திறக்கப்படவுள்ளதாக மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மண்முனை வடக்கில் 4 வங்கிகளும், காத்தான் குடியில் 2 வங்கிகளும், ஆரையம்பதியில் 2 வங்கிகளுமாக 3 பிரதேச செயலக பிரிவுகளில் இவை திறக்கப்படவுள்ளன.

மேற்படி வங்கிகள் திறப்பதற்கான கட்ட வேலைகள் பூர்த்தியாகி, ஊழியர்களும் பயிற்சிகளை நிறைவு செய்து விட்டார்கள்.

இம்மாவட்டத்தில் 23 சமுர்த்திவலயங்களில் 23 வங்கிகள் திறக்கப்பட வேண்டிய போதிலும் முதற்கட்டமாக 8 வங்கிகள் திறக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

(க-60)

## மட்டு. தமிழ் மாணவிக்கு அமைச்சரின் விருது இன்று கிடைக்கிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மாணவியொருவர் இன்று வியாழக்கிழமை(10-2-2000) கொழும்பில் அமைச்சர்எஸ். பி.திசாநாயகாவினால்விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறார். மட்/வந்தாறுமூலை மகாவித்தியாலய மாணவி பகீதரன் டிலுக்சனாவேஇவ்வாறு கௌரவிக்கப்படவுள்ளார்.

சமுர்த்திசமுக உதவி பெறும் குடும்பங்களின் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் முதல் பரிசு பெற்ற 21 மாவட்டங்களைச்சேர்ந்த 21மாணவர்கள் இவ்வாறு கௌரவிக்கப்படவுள்ளனர்.

சமுர்த்தி ஆணையாளர் நாயகம் கலாநிதி குமாரி நவரட்ண தலைமையில் இவ் வைபவம்நடைபெறவுள்ளது. மேற்படி மாணவி மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் பரிசான 2500ரூபாய் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. (க-60)

## கௌரவ விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவை கடந்த மூன்றாண்டுகளாக ''ஞானச்சுடர்'' மாத சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு வருகின்றது.

இந்த சஞ்சிகையில் மூன்றாண்டுகளாக தொடர்ந்து ஆக்கங்களை எழுதிவந்த எழுத்தாளர்களை விருது வழங்கிக் கௌரவிக்கவேண்டுமென தொண்டமனாறு சந்நிதியான்ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் முடிவு செய்து, அதன்படியே பதின்மூவரை பாராட்டி விருது வழங்கிக் கௌரவித்தனர்.

சிவத்திரு வ.குமாரசுவாமி ஐயர், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கா.கணேசதாசன், வை.க. சிற்றம்பலம். புத்தொளி ந.சிவபாதம் ஆகியோர் உட்பட பதின் மூவர் விருது பெற்றனர். (க)

## மலசலகூடம் அமைப்பு

(கிரண்வாய்)

யா/இமையாணன் அ.த.க வித்தியாலயத்தில் ஜீ.ரி.இசட்டின் உதவியுடன் சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவில் ஒரு தொகுதி மலசல கூடம் அமைக்கப்பட்டு அதன் கட்டட வேலைப்பாடுகள் முடிவுற்றுள்ளது. (க-27)

நல்லூர் ... மன்றம் யாழ்ப்பாணம்

# செய்தித் துளிகள்

## கட்டட திறப்புவிழா

(மந்திகை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஆண்களுக்கான விடுதி, மினி சத்திர சிகிச்சைப் பிரிவு, நோயாளர் வாகன தரிப்பிடம், புதின சோலை (நூலகம்) ஆகிய வற்றின் கட்டடத் திறப்புவிழா நாளை 11-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்.

மாவட்ட வைத்திய அதிகாரி கே. மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு யு. என். எச். சி. ஆர். யாழ். வதிவிடப்பிரதிநிதி ஜோன். எப். டிக்சன் பிரதமவிருந்தினராகவும் கலந்து கொள்வார். (க-23)

## குருமன் நோய் தாக்கம்

(அச்சுவேலி)

கடுமையான வெப்பம் காரணமாகவும், பனித்தாக்கம் காரணமாகவும் மிளகாய்ச் செடிகளில் குருமன் நோய்த் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளது.

இதனால் மிளகாய்ச்செடிகளின் வளர்ச்சி தடைப்படுவதுடன் விவசாயிகள் எதிர்பார்த்த விளைவையும் பெற்றுக் கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-14)

## வைத்திய சேவை

(இணுவில்)

நோயாளர் நலன் கருதி இணுவில் ''மைக்லியோட்'' வைத்தியசாலையில் மாதத்தில் இரு ஞாயிறு தினங்களில் பி. ப2. 30மணியளவில் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ம. சிவநேசன் நோயாளர்களைபார்வையிட உள்ளார்.

இச் சேவை எதிர்வரும் ஞாயிறு முதல் இடம்பெற இருக்கிறது. இதற்கான அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலை முகாமையாளர் இராச சவுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

## வரவேற்பு வைபவம்

யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமனம் பெற்றுள்ள திருமதி. வ. சிவபாலனின் வரவேற்பு வைபவம் வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் முன்னைய அதிபர். திரு. ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. க. இராசதுரை, வித்தியாலய அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. கா. கணேசதாசன், உப அதிபர் திருமதி. த. ஞானப்பிரகாசம், உட்பட பிரமுகர்கள் பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். (க)

## தைமாதமாதாந்த கொடுப்பனவு

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலர்பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான தை மாதக் கொடுப்பனவுகள் இன்று 10 ஆம் திகதி முதல் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப் பணத்தினை பெறுவோர் தத்தமது பகுதிகளில் உள்ள அஞ்சல், உப அஞ்சலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சித்திரப்பாட செயலமர்வு

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில்7,10ம்தரத்திற்கு கற்பிக்கும் சித்திர பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை 11ஆம் திகதி காலை 9 மணிக்கு நெல்லியடி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில்நடைபெறும்என வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார். (க)

## நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

பதின் மூன்று வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றத்திற்காக யாழ். நீதிமன்றில் ஒருவர் ஆஜர் படுத்தப்பட்டார்.

செல்வராசா அகிலன் என்ற மேற்படி சந்தேக நபரை விசாரித்த நீதிபதி ஆர். ரி. விக்னராஜா எதிர் வரும் 21 ஆம் திகதி வரை அவரை விளக்க மறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (-4)

## அரசின்புதிய அரசியலமைப்புதிருத்தத்திற்கு மாகாண முதலமைச்சர்கள் ஆதரவு

(கொழும்பு)

மாகாண முதலமைச்சர்கள் அனைவரும் அரசாங்கத்தின் அரசியலமைப்பு சீர்திருத்தத்தை ஆதரிப்பதென முடிவு செய்திருக்கின்றார்கள்.

பண்டாரவளையில் 'நேற்று முன்தினம் ஊவாமாகாண முதலமைச்சர் அமரவீர வன்னி தலைமையில் நடைபெற்ற முதலமைச்சர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சீர்திருத்தங்கள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கமுடையது. என்றும் அரசாங்கத்தின் சமாதான முயற்சி சம்பந்தமாக பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமரவீர வீரவன்னி தெரிவித்தார்.

### சாவகச்சேரி

## வறிய மாணவரின் கல்விக்கென லண்டனிலிருந்து 10 ஆயிரம் அன்பளிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் செயல்படுத்தப் பட்டுவரும் மிக வறிய மாணவர்களின் கல்வித்திட்டத்துக்காக லண்டனைச் சேர்ந்த திருமதி ச. பஞ்சலிங்கம்குடும்பம் 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் என கல்வித்திட்டத்தின் தலைவர் லயன் கே. சற்குணதேவன் குறிப்பிட்டுள்ளார்.

இக் கழகம் தென்மராட்சி பிரதேசத்தில் தெரிவுசெய்யப் பட்ட சுமார் 25 மாணவர்களுக்கு மாதாந்த உதவிகளை வழங்கிவருவது குறிப்பிடத் தக்கதாகும். (க-77)

### நல்லூர் பிரதேச எல்லைக்குட்பட்ட

## கழக துடுப்பாட்டத்திற்கிடையில் ஜொலிஸ்ரார் அணி சாம்பியன் ஆனது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற துடுப்பாட்டத்தில் ஜொலிஸ்ரார் சம்பியன் ஆனது.

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் பதிவு செய்யப் பட்ட 16 கழகங்களுக்கு இடையே நடைபெற்ற மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் லெவின்ஸ்ரார் கழக அணிக்கும் ஜொலிஸ்ரார் கழக அணிக்குமிடையில் கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணி வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. (22)

### லெபனான் நெருக்கடி நிலை

# இஸ்ரேல்-சிரிய பேச்சுக்களை குழப்பும் நிலை ஏற்படுமா?

(பெய்ரூட்)

லெபனானில் மோசமாகி வரும் நெருக்கடி நிலைமை, இஸ்ரேல் - சிரிய சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புக்களை குறைத்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இஸ்ரேல் ஆதரவு பெற்ற தெற்கு லெபனான் மூத்த தளபதி ஒருவரும்,5 இஸ்ரேல் இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து இதற்கு பதில் நடவடிக்கையாக இஸ்ரேல் விமானப்படையினர் லெபனான் மின் மாற்றிகளைத் தகர்த்தும், ஹிஸ்புல்லா அமைப்பின் தளங்களை அழித்தும் பதிலடி கொடுத்தனர்.

இது லெபனானில் நடைபெற்றதாயினும், லெபனான் மண்ணில் நிலை கொண்டுள்ள சிரிய நாட்டுக்கு எதிரான உணர்வைக் காட்டும் செயலாகவும் இதனைக் கொள்ள இடமுண்டு.

ஹிஸ்புல்லா அமைப்பின் இராணுவ நடவடிக்கைகளை சிரிய நாடே தீர்மானிப்பதாக இஸ்ரேல் நம்பி வருகிறது.

இஸ்ரேல்-சிரிய சமாதானம் மலர வேண்டுமெனில் ஹிஸ்புல்லா அமைப்பின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் இஸ்ரேல் கருதுகிறது.

எனவே இரு நாடுகளும் முரண்பாடுகளைக் களைந்து விட்டுக் கொடுப்புக்கள் மூலமே இஸ்ரேல்-சிரிய சமாதானம் என்னும் கனவை நனவாக்க முடியும் என அரசியல் அவதானிகள் கருதது வெளியிட்டுள்ளனர். (க-9)

## உலக வலம்

## செனட்சபைத் தேர்தலில் போட்டியிடும் அமெரிக்க முதல் பெண்மணி

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனின் மனைவி திருமதி ஹிலாரி கிளிங்டன் அமெரிக்க நாடாளுமன்ற செனட்சபை தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

நியூயோர்க் அருகே நடந்த நிகழ்ச்சி ஒன்றிலேயே அவர்மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்வாறு திருமதி ஹிலாரி அறிவித்த பொழுது அவரது கணவர் பில்கிளிங்டனும் அருகில் இருந்தார் எனத்தெரிவிக்கப் படுகிறது.

பதவியிலிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் துணைவியார் அமெரிக்க நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவது இதுவே முதற்தடவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

### தனது மணிக்கட்டின் மீது

## 200 தடவைகள் கார் ஓடவைத்த 13 வயது சிறுவனின் மகத்தான.சாதனை

(சென்னை)

விஜய வாடாவைச்சேர்ந்த 13வயதுச்சிறுவனானடி.ராமகிருஷ்ணன் தனது கைமணிக் கட்டின் மீது 200தடவைகார் ஒன்றை ஒடவிட்டுச் சாதனை படைத்துள்ளான்.

ஆனால் இந்தச்சிறுவனின் கையில் காயம் ஏதும்இல்லை. இவன் 8ஆம் வகுப்பில் கல்வி கற்கின்றான் இவன் குங்பூ கலையில் தேர்ச்சிமிக்கவன் என்றும் சொல்லப்படுகிறது.

இத்தகைய சாதனை படைப்பதற்கு உடல் வலிமையும் மனத்திடமும் வேண்டும் அது இவனிடம் நிறையக் காணப்படுகிறதுஎன அவ் ஊர் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-5)

### கிழக்குத் தீமோர் படுகொலைகளுக்கு

## காரணமான இராணுவத் தளபதியை இராஜினாமாசெய்யுமாறுவலியுறுத்துவேன்

### இந்தோனேசியப் பிரதமர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு ஜகார்த்தா திரும்பியதும், கிழக்குத் தீமோர் படுகொலைகளுக்கு காரணமான இராணுவத் தளபதி ஜெனரல் விராண்டோவை, உடன் பதவியை இராஜினாமாச் செய்யுமாறு வலியுறுத்தப் போவதாக இந்தோனேசியப் பிரதமர் அப்துல் ரகுமான் தெரிவித்தார்.

இரு நாள் இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இந்தோனேசியப் பிரதமர் அப்துல் ரகுமான் வாஹிட் செய்தியாளர் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை இராணுவம் புரிந்த தவறுகளுக்கு அரசாங்கமோ அல்லது அரசியல் தலைவர்களோ பொறுப்பாளிகள் ஆகவும் முடியாது எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

இப்பயணத்தின் போது, இந்தியப் பிரதமர் வாஜ்பாய், மற்றும் அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடாத்தி இருப்பதாகவும் மகாத்மா காந்தி நினைவுப் பூங்காவினைத் தரிசனம் செய்ததாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை, கிழக்குத் தீமோரில் தனது படைகள் செய்த வன்முறைகளுக்கு சட்ட ரீதியாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ தான் பொறுப்பெடுக்க முடியாதென இந்தோனேசிய இராணுவத் தளபதி ஜெனரல் விராண்டோ, சிங்கப்பூர் வானொலி ஒன்றுக்குப் பேட்டி அளிக்கையில் கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

## மொசாம்பிக் விமான விபத்தில் 2 பேர் பலி! 14 பேர் படுகாயம்

(லண்டன்)

மொசாம்பிக் நாட்டு பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 2 பேர் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமடைந்தனர்.

மொசாம்பிக் நாட்டின் சர்வதேச விமான நிலையமான மஹிட்டோவில் இருந்து அருகில் உள்ள நகரம் ஒன்றுக்குச் சென்றுகொண்டிருந்த வேளையில் இவ் விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகிறது, விமானம், வானில் வெடித்து சிதறுவதற்கு சற்று முன் மிகப் பெரிய சத்தம் ஒன்று கேட்டதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இது விபத்தா அல்லது திட்டமிட்ட சதி நடவடிக்கையா என்பது பற்றி எதுவுமே கூற முடியாதுள்ளதாக புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-9)

## பிரதேசசபை தீர்மானம் நிறைவேற்றல்

([illegible])

இலவச ''சீசன்'' டிக்கற் பாடசாலை மாணவர்களின் பஸ் சீசன் டிக்கற் சட்டணத்தைப் பத்து வீதமாகக் குறைத்தமையைப் பாராட்டி நல்லூர் பிரதேச சபை போக்குவரத்து அமைச்சர் பௌசி அவர்களுக்கு. நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர் அத்தோடு நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வாழும் வறுமைக்கோட்டுக்குக் கீழ்வாழும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பஸ் சீசன் டிக்கற் வழங்குவதற்கும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார். (க)

## வீதி புனரமைப்பு

இணுவில் சிவகாமி அம்மன் வீதி ஒரு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை 99 ஆம்ஆண்டுவரவு செலவுத் திட்டத்திலிருந்து யாழ், மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கித் தந்ததாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் தெரிவித்தார்.

# புதிய கல்வித் திட்டத்தின் நோக்கம் மாணவனின் ஆளுமை விருத்தியே

## ஓய்வு பெற்ற அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''குழந்தைகளின்மனம் மிகவும் மென்மையானது. அம்மனம் எதிர்காலத்தில் சிறப்புற அமைய வேண்டுமானால் நாம் அதற்கான முயற்சிகளை இன்றே எடுத்தாக வேண்டும். இன்றைய சிறார்களைப் பற்றி நாம் கவலைப்படா விட்டால் எதிர்காலத்தில் அவர்களின் வாழ்வு மட்டுமல்ல நாட்டின் வாழ்வும் நலிவடைந்து விடும்''.

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் கா. கணேசதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழுமபுத்துறை இந்து மகாவித்தியாலய உபஅதிபர் திருமதி ந. ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இன்றைய புதிய கல்வித் திட்டத்தின் நோக்கம் மாணவனை பரீட்சைகளில் சித்தியடையச் செய்வது மட்டுமல்ல. அது மாணவனின் பூரண ஆளுமைவளர்ச்சிக்கும் உதவுவதாகும். மாணவனை அன்பு, அறிவு, ஆற்றல், பண்பாடு, இறை நம்பிக்கை, சமாதானம், சகிப்புத் தன்மை, நிறைந்தவனாகவும் ஆக்குவதே உண்மையான நோக்கமாக கல்வி அமைய வேண்டும்.

வீட்டுச் சூழலில் இருந்து பாடசாலை என்ற புதிய சூழலுக்குள் வந்துள்ள இளம் சிறார்களை எதிர்கால வாழ்வில் நல்லவர்களாகவும், வாழ்வாங்கு வாழ்பவர்களாகவும், வல்லவர்களாகவும் வாழ்வதற்கு வழிவகுக்கும் பாரிய பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியர்களின் நற்சேவையிலேயே தங்கியுள்ளது.

புதிய கல்விச் சீர் திருத்தம் பாடசாலைகளில் முன்பு காணப்பட்ட இறுக்கமான கற்றல் சூழ்நிலையிலிருந்து மாணவர்களை விடுவித்து இயல்பான விருப்பத்துடன் கற்பிக்கும் நிலையினை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. ஆசிரியர்கள் போதனைக்கு அதிகம் முக்கியத்துவம் அளிக்காமல், மாணவர்களின் செயற்பாட்டிற்கும். ஆக்கத்துக்கும், திறமைகளுக்கும் அதிகம் இடம் கொடுத்து கருத்துடன் கண்டறிந்து கற்கும் முறைக்கு வழி காட்டும். ஒரு ''இலகுவாக்குபவர்'' ஆக மாறுகிறார். மாணவர் மையக் கல்விக்கு முன்னுரிமை கொடுக்கிறார். மாணவனைத் தனியாகவும், குழுவாகவும், சுதந்திரமாகவும் செயற்பாட்டிற்குக் கற்க விட்டு அவனை கவனித்து முன்னேற்றுவார். ஆசிரியர்களின் சிறந்த சேவையிலும் பெற்றோர்களின் ஒத்துழைப்பிலுமே புதிய கல்வித் திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது எனவும் கூறினார்.

கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (க)

## முன்பள்ளி பிள்ளைகளுக்கு போசணை திட்டத்தை அமுல் செய்யவும்

### -அதிகாரிகள் ஆலோசனை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன்பள்ளித் திட்டங்களில் பயில்கின்ற சிறுவர்களுக்கு போசணைத்திட்டத்தினை அமுல் செய்யும் படி அரசு திணைக்களங்களில் அதிகாரிகள் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு ஆலோசனை கூறிவருகின்றனர்.

ஆயினும் போஷாக்குத்திட்டத்தினை கிராமிய மட்டதில் அமுல் செய்வதானால் பெரும் தொகை நிதிதேவைப் படுகின்றது. ஆதலால்முன் பள்ளிகளை நடாத்திவருகின்ற உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களால் இக்கால சூழ்நிலையில் இக்குறித்த திட்டத்துக்கு நிதியைக் கண்டுபிடிக்க முடியாது திண்டாடிவருகின்றனர்.

முன்பள்ளித் திட்டங்களை நடாத்தி வருகின்ற அரச சார் பற்ற நிறுவனங்கள் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த மதிப்பூதியம் காகிதாதிகள் .உபகரணங்கள் மற்றும் ஊக்குவிப்பும் பயிற்சிகளை நடாத்திவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை உள்ளூர்அரச சார்பற்ற நிறுவனங்களால் திட்டமிட்டு நடாத்தப்பட்டு வருகின்ற முன்பள்ளிகள் மீதும், முன்பள்ளி ஆசிரியைகள் மத்தியிலும் அரச திணைக்கள அதிகாரிகள் அடிக்கடி மேலாதிக்கம் செலுத்தி திட்டத்தின் செயல்பாடுகளில் குறைகள் கண்டு வருவதுகுறித்து முன்பள்ளி ஆசிரியைகள் மத்தியில் விசனமும் அதிருப்தியும் நிலவ ஆரம்பித்துள்ளது.

(க-77)

## எரிபொருள் விலையுயர்வைப் பயன்படுத்தி பொருட்களின் விலைஉயர்த்த வேண்டாம்

### ஜனாதிபதிச் செயலகம் வேண்டுகோள்

(கொழும்பு)

எரிபொருள் விலையுயர்வைப்பயன்படுத்தி பொருட்களின் விலைகளை உயர்த்த வேண்டாமென்று வர்த்தகர்களையும் மற்றும் சகல தரப்பினரையும் அரசாங்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

டீசல், மண்ணெண்ணெய் என்பவற்றின் விலையுயர்வால் பொருட்களை ஏற்றிச் செல்லும் சட்டணம்10 வீதத்திற்கு குறைவாகவே உயர்த்தப்பட வேண்டும்.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்ந்துள்ளதால் இன்றுள்ள விலையில் விற்பதானால் வருடமொன்றுக்கு 18 ஆயிரம் மில்லியன் டொலர் முதல் 20 ஆயிரம் மில்லியன் டொலர்வரை அரசுக்கு நஷ்டம்ஏற்படும். இது அரசால் எந்த வகையிலும் தாங்கிக் கொள்ள முடியாததாகும். எனவே மேற்படி தாக்கத்தை கொஞ்சமாவது குறைக்கும் நோக்கிலேயே டீசலுக்கு 23 வீதமும் மண்ணெண்ணெய்க்கு48 வீதமும் விலை உயர்த்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீபூதநாதசுவாமி தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று10ஆம்திகதி ஆரம்பமாகி இம்மாதம் 21ஆம்திகதி வரை இடம்பெறவுள்ளது. (க)

## முதன்மை ஆசிரியர் நியமனம்

(அல்லைப்பிட்டி)

சென்ஜேம்ஸ் வித்தியாலயத்தில் றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ பாட ஆசிரியராக கடமையாற்றிய பிரான்சிஸ் ஞானசீலன் முதன்மை ஆசிரியராக தீவகக் கல்வி வலயத்திற்கு, கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரனால் கிறிஸ்தவ றோ.க. பாடப்புலத்திற்கு நியமனம் பெற்றுள்ளார். (க-46)

## வைத்தியர் இடமாற்றம்

(அச்சுவேலி)

வலி கிழக்குப் பிரதேச சபை உபகாரியாலயத்தில் பிரதேச சபையின் அனுசரணையுடன் இயங்கும் இலவச ஆயுள்வேத வைத்திய சாலையில் இதுவரை வைத்தியராக கடமைபுரிந்த திருமதி சி.வர்ணகுலேந்திரன் தீவகத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவரின் இடத்திற்கு புதிதாக திருமதி.அ. கிருஷ்ணானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் வைத்தியசாலையில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள கடமை நேர அட்டவணையின்படி காலை 9.00 மணிதொடக்கம் நண்பகல் 12.30மணிவரையும் மாலை 1.30மணிதொடக்கம் பி.ப. 4.00மணிவரையும் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-57)

## கண்ணிவெடி அகற்றும்பணி ஆரம்பம்

யாழ். மாவட்டத்தில் கண்ணி வெடி அகற்றும் பணி மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இப் பணிக்கு அவுஸ்திரேலிய டச்சு அரசாங்கங்களினால் 10கோடி டொலர் வழங்கப் பட்டுள்ளது.இந்நிதியாழ். மாவட்டத்தில் கண்ணி வெடி அகற்றும் பணிக்கு செலவிடப் படுமென யூ.என்.டி.பி.வதிவிடப்பிரதிநிதி பீற்றர் புறூக் தெரிவித்துள்ளார.

மேலும் தெரிவிக்கையில் 68,578 சதுர பரப்புக்காணி நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாகவும் இது தொடர்ந்து 6 மாத காலம் நீடிக்கும் என தெரிவித்தார்.

# ஒருவரால் கற்பிக்கப்படும் எந்த விடயமும் தொடர் மறுபரிசீலனைக்கு விடப்பட வேண்டும்

(தொடர்ச்சி)

1) ஆசிரியரின் ஆலோசனையை ஏற்று நடத்தல்.

2) தனது கடமைகளை சுய முயற்சியுடன் ஆரம்பித்தல்.

3) சுதந்திரமாக தமது கடமைகளை கொண்டுநடத்துதல்.

4) தன்னம்பிக்கையோடு தனது கடமைகளில்ஈடுபடல்.

5) குழுவாக இயங்குவதற்குரிய விருப்பம்.

6) மற்றையோர்க்கு மதிப்பளித்தல்.

7) மற்றையோரோடுகருத்துக்களை பரிமாறல்.

8) மன ஒருமைப்பாட்டோடு கடமையில் ஈடுபடல்.

9) மற்றையோர் ஆரம்பிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ள விருப்பம்.

10) கூட்டுப் பொறுப்பினை ஏற்கும் திறன்.

11) செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுதல்.

12) குறித்த நேரத்தில் கடமையில் ஈடுபடும் பழக்கம்.

13) மரியாதையோடும்சகஜமாகவும் பழகுதல்.

14) தொடர்பாடல் திறன்.

15) தலைமைப் பொறுப்பு ஏற்றல்.

16) மன உறுதியோடு இருக்கும் தன்மை.

17) பாடசாலை வளங்கள் தொடர்பான உடன்பாடான மனப்பாங்கு.

18) சுற்றாடலிலுள்ள இயற்கை வளங்கள் பற்றிய உடன்பாடான மனப்பாங்கு.

அவதானிப்பு பத்திரம் அல்லது அவதானிப்பு அறிக்கையொன்றில் மேலே கூறிய 18 விடயங்கள் இடம்பெற்று இருக்கும். 1 ல்இருந்து 11 வரையான விடயங்கள் பிள்ளையின் கற்றலுக்காக கற்றல் என்னும் அடிப்படைத் தேர்ச்சியுடன் தொடர்புபட்டதாகும். அதுபோல 12 தொடங்கி 13-வது வரை பிள்ளையின் விழுமியம் என்னும் தேர்ச்சியுடன்தொடர்புபட்டது. 14ல் இருந்து 15 வரையான விடயங்கள் தொடர்பாடல் தேர்ச்சிகளுடன் தொடர்புபட்டதாகும். 17ல் இருந்து 18 வரையான விடயங்கள் பிள்ளையின் சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகளுடன் அல்லது ''காப்பு'' பற்றிய தேர்ச்சிகளுடன் தொடர்புபட்டதாகும்.

எனவே ஒரு ஆசிரியர் அவதானிப்புப் பத்திரம் ஒன்றினை கணிப்பீட்டுக் கருவியாக கையாளும்போது மேற்படி அறிவுத் தளத்தில் நின்று கொண்டு செயற்பட்டாலே சரியான கணிப்பீட்டினை மேற்கொள்ள முடியும். ஆனால் பெரும்பாலான பாடசாலைகளில் இவ்வாறான சிந்தனையுடன் அவதானிப்புப் பத்திரம் கையாளப்படுவதில்லை என்பதே உண்மை. எனவே அவதானிப்புப் பத்திரமொன்றின் தலையாய வேலை மாணவர்களிடம் அடிப்படைத் தேர்ச்சிகளில் ஏற்படும் விருத்தி அல்லது முன்னேற்றம் என்பவற்றை அவதானிப்பதாகவே அமையவேண்டும். கற்றல் கற்பித்தல் செயன்முறைகள் ஆசிரியர் மயமானது, மாணவர் மயமானது, பரீட்சை மயமானது என்ற எண்ணக் கருக்கள் காலவெள்ளத்தில் அழிந்து இன்று தேர்ச்சிகற்றல் அல்லது தேர்ச்சிமையக் கற்றல் சிந்தனைகள்முக்கியத்துவம் பெறுவதால் தேர்ச்சிகளை கணிப்பிட அவதானிப்புப் பத்திரமும் ஒரு கருவியாக பயன்படுத்தப்படுவதற்கு தெளிவானதொரு புரிதலும்அவசியமாகின்றது. அத்தகையவொரு சிந்தனையை இக்கட்டுரை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கின்றேன்.

(முற்றும்)

**ஏ. சி. ஜோர்ஜ்**
**(யாழ். கல்வி வலயம்)**

## விரைவில் குடிநீர் விநியோகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் பிரதேச மக்களுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இத் திட்டத்துக்கென 10 லட்சம் ரூபாவை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி பன்முகப் படுத்தப்பட்டநிதியில் இருந்து வழங்கியுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் வல்லை வரையுமுள்ள பிரதேசத்தில் மீளக் குடியேறிய மக்கள் பலன்பெறுவர்.

(க-57)

## காணவில்லை

சித்தங்கேணி - டச்சு றோட்டைசேர்ந்த தவராசா விஜயமலர் (32 வயது) ஜனவரி 30 ஆம் திகதி முதல் காணாமல் போய்விட்டார் என அவரது கணவர் தம்பிராசா தவராசா நேற்று 8 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான் தரங்களது மன்னோ பொறை-

- குறள்

# வலம்புரி

## ஐந்தில் வளையாதது

கற்றவர் மலிந்த நாடுகளில் ஒன்று எம் நாடு. எண்பது வீதத்திற்குமேல் எழுத்தறிவுள்ளவர்கள் வாழும் நாடு இலங்கை. இது புள்ளி விபரங்கள் தரும் செய்தி. ஆயின் யாழ்.குடா நாட்டில் நாளைய சமுதாயம் கல்வியில் நலிவடைந்து பல்வேறு காரணிகளால் தாக்கமடைவதை எண்ணும்போது மனம்வேதனைப்படுகிறது. கல்வி நிலையில் உச்சத்திலிருந்த மாவட்டம் பதின்மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டமை காலத்தின் கோலமே.

யாழ். மாவட்டத்தில் ஒருலட்சத்து மூப்பத்தையாயிரம் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர். இருபத்தேழாயிரம் மாணவர் ஒழுங்காகப் பாடசாலைக்குப் போவதில்லை போரினால் பதின்மூவாயிரத்து ஐந்நூறு மாணவர்கள் அனாதைகளாகியுள்ளனர்.

அறிவுசார் சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிகள் அனைத்தும் செய்தாக வேண்டும். எந்த மட்டத்திலிருந்து செயற்பட வேண்டுமென்பதை கல்வியமைச்சு மிகுந்த அக்கறையுடன் சுட்டிக்காட்டுவது ஏற்றுக்கொள்ள வேண்டியதொன்றாகும்.

ஆரம்பப் பிள்ளைப்பருவஅபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தவேண்டும். என கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தீர்மானித்திருக்கிறார். உரிய இடத்தில் இருந்து எழுகின்ற சிந்தனை வரவேற்கத்தக்கது. வளம் பெற எம்மால் ஆன அனைத்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் செய்வோமாக.

அமைச்சு முன்மொழிந்த செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலேயே வளர்ச்சி தங்கியிருக்கிறது. பாடசாலைக் கல்வி முறை என்பது மனிதவளவளர்ச்சியை நோக்காகக்கொண்டதாகும். ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இதன் கால்கோளாக உரியதுறைக்கு உதவிக் கல்விப்பணிப்பாளர்களை வலயரீதியாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி கல்வித் திணைக்களத்திற்கு ஒரு புதிய துறையாகும். அத்துறையுடன் தொடர்புபடுவோர் ஆற்றலராகுக.

- அன்புடன் ஆசிரியர்

---

பண்டிதமணியின்

# கூர்ந்தமதியும், ஆழ்ந்த சிந்தனையும் அவரது மதிப்பை உயர வைத்தன

## நூல்வெளியீட்டில் பேராசிரியர் உரை

'பண்டிதமணி அவர்களது கூர்ந்த மதியும் ஆழ்ந்த சிந்தனையும் அவரை உயர்ந்தவராக மதிக்கச் செய்தன, நாடளாவிய முறையில் பாராட்டுப் பெற்றார். உயர்கல்வி ஸ்தாபனமான இலங்கைப் பல்கலைக்கழகம் பண்டிதமணி அவர்களுக்கு இலக்கியக் கலாநிதி என்ற பட்டத்தினை வழங்கிச் சிறப்பித்தமை பெருஞ் சிறப்புக்கு உரியதாகும். பண்டிதமணி அவர்களது நூற்றாண்டு விழாவை ஒட்டி அவரது உருவம் பதித்த தபால் தலையைத் தபால் திணைக்களம் வெளியீடு செய்தமை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும். தபால் தலை வெளியீட்டின் மூலம் பண்டிதமணி அவர்களது புகழ் உலகமெல்லாம் பரவியுள்ளது பெருமைக்குரியது.'

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பண்டிதமணி நூற்றாண்டு விழாவும் புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களைப் பாராட்டும் வைபவமும் இடம் பெற்ற பொழுது 'முத்திரையிற் பண்டிதமணி' சிறப்பு மலரை வெளியிட்டு வைத்துப் பேசிய யாழ்.பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் தலைவரும் கல்விப் பணிப்பாளருமாகிய வ.செல்வராசா தலைமையில் விழா இடம் பெற்றது.

பண்டிதமணி அவர்களது உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதை அடுத்துகட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அறிமுகஉரை நிகழ்த்துகையில்: தமது சங்கம் எடுத்து வரும் முன்னேற்றப் பணிகளைக் குறிப்பிட்டு விட்டு பண்டிதமணி அவர்களது நூற்றாண்டு விழாவினைக் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் கொண்டாடுவது குறித்தும் 5ஆம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், பண்டிதமணி நூற்றாண்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் பரிசில்களை வழங்குதல் பற்றியும் விபரித்தார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி ஆசிரியமணி அ.பஞ்சாட்சரத்தின் சேவையைப் பாராட்டிப் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் ஆசிரியமணிக்குப் பொன்னாடை போர்த்தினார்.

தலைவர் வ.செல்வராசா 'ஆசிரியர் திலகம்' என்ற கௌரவப் பட்டத்தினைச் சூட்டினார்.

பாராளுமன்ற முன்னை நாள் அறிக்கையாளர் செல்லப்பா நடராசா பாராட்டுரை வழங்குகையில்: 'பண்டிதர் கணபதிப்பிள்ளைக்கு தினகரன் ஸ்தாபனம் வழங்கிய பண்டிதமணி என்ற பட்டம் நிலைத்து விட்டது. அதே தினகரன், ஆசிரியர் பஞ்சாட்சரத்துக்கு ஆசிரிய மணி என்ற விருதை வழங்கியது. ஆசிரிய மணி என்றவிருதும் நிலைத்து விட்டது' என்றார்.

ஆசிரியமணி பஞ்சாட்சரம், பண்டிதை வ.பத்தினிப்பிள்ளை, பிள்ளைக்கவி ப.சிவராசசிங்கம், சிவஞானம் பாலமுரளி உட்பட அறிஞர்கள் பலர் உரை நிகழ்த்தினர். கல்வயல் கவிஞர் வே.குமாரசாமியின் கவிதை நிகழ்வும் இடம்பெற்றது. (க)

---

சீனா, கம்பூச்சியா, லாவோஸ்

# நாடுகளுக்கு எதிரான பிரச்சாரத்தில் வொய்ஸ்ஒவ் அமெரிக்கா ஈடுபடுகிறது

## இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வொய்ஸ் ஒவ் அமெரிக்கா, அதன் வானொலியான 'பிரீ ஏசியா' வில் ஒலிபரப்பாகி வரும் அரசியல் செய்திகள், நிகழ்ச்சிகள் கம்பூச்சியா, லாவோஸ், சீனா போன்ற நாடுகளுக்கும் அவற்றின் அரசுகளுக்கும் எதிரானவையாக அமைந்திருப்பதாக ஆசிய இராஜ தந்திர வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இவ் வானொலியில், சில ஆசிய நாடுகளுக்கு எதிராக தனது நாட்டில் இருந்து நிகழ்ச்சி ஒலிபரப்புச் செய்வதற்கு சிறீலங்கா எவ்வாறு அனுமதிக்க முடியும் என ஆசிய இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து கேள்வி எழுந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை-

ஸ்ரீலங்காவில் இருந்து ஒலிபரப்பாகும் வொய்ஸ் ஒப் அமெரிக்காவின் பிறீ ஏசியா ஒலிபரப்புக்கு சீன நாடு ஆட்சேபனை தெரிவித்திருப்பதுடன் தடை செய்தும் வருகிறது. அத்துடன் இவ் ஒலிபரப்பு திட்டமிடப்பட்ட தனக்கு எதிரான பிரச்சாரம் எனவும் கூறி வருகிறது.

இதனை உறுதிப்படுத்துவது போல், கடந்தமாதம் சீனத் தலைநகர் பீஜிங்கிற்கு, அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் விஜயம் மேற்கொண்டிருந்த போது, றேடியோ பிறீஏசியா செய்தியாளர்கள் ஒருவருக்கான விசாவினைத் தடை செய்து தனது எதிர்ப்பை சீனா தெரிவித்திருந்தமை தெரிந்ததே. (க-9)

---

# எமது செயற்பாடுகள் ஜனநாயகரீதியானது இராணுவத் திட்டம் எதுவும் கிடையாது

(வவுனியா)

எமது செயற்பாடுகள் யாவும் ஜனநாயக ரீதியிலானதாகவே அமையும் இராணுவ வேலைத்திட்டம் எதுவுமே கிடையாது சகலரையும் போல தற்பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளோம் அதுவும் ஜனநாயக சூழல் ஏற்படும் வரைதான் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பெருமாள் அணியினர் வவுனியாவில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

மக்களுக்காக என்ன பணிகளையாற்றினோமோ அப்பணிகளை தொடர்ந்தும் புதிய உத்வேகத்துடன் மேற்கொள்வதே எமது பிரதான குறிக்கோள் எனவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் மத்திய குழு உறுப்பினரான ரி. சிறிதரனும். றொபேட். சுபத்திரனும் தெரிவித்தனர்.

தமது எதிர்கால நடவடிக்கை குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கும் வகையில் இந்த மகாநாடு குருமண்காடு உறைவிடவீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

சமாதானம், அமைதி, சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றை நிலை நிறுத்தி சுபீட்சபாதையில் முன்னெடுத்து செல்லுவதும் எமது செயல் திட்டங்களில் ஒன்றாகும் என தெரிவித்த சிறிதரன் தாம் அறவே வன்முறைகளை வெறுக்கின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

அதிகார பரவலாக்கலுக்கானவிழிப்புணர்வுக்களை ஏற்படுத்தும் அதிகார பரவலாக்கல் தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்குவது எமது செயல்பாடுகளாக அமையும் எனவும் குறிப்பிட்டனர். இந்த செய்தியாளர் மகாநாட்டில் தேசிய அமைப்பாளர் இரா. துரைரட்ணம். மத்திய குழு உறுப்பினர்களான பி. சிவரட்னம் வவுனியா மாவட்ட அமைப்பாளர்கே. ஞானதாஸ் சிவம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (க-103)

---

## இன்றைய சிந்தனை

தியானத்துடன் கூடிய பரிபூரண சக்தியை தேடுங்கள். மறுதலிக்கப்பட முடியாத மனங்கள் என்றைக்கோ ஒருநாள் மகத்தானதாக மாற்றப்படும்,

---

## சங்காபிஷேகம்

(நெல்லியடி)

எழுதுமட்டுவாள் எழுவுள்ள அருள்மிகு ஸ்ரீமீனாட்சி அம்மன் தேவாலயத்தில் மஹா சங்காபிஷேகம் இன்று 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. (க-18)

---

# சாயி மருத்துவமனை திறப்புவிழா

(வவுனியா)

வவுனியா பிரசாந்தி வீதியில் புதிதாக கட்டப்பட்ட சாயி மருத்துவமனை இன்று வியாழக்கிழமை மாலை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் அவர்களினால் வைபவரீதியாக திறந்துவைக்கப்படும். பிரதி வியாழன் தோறும் இந்த மருத்துவமனை திறந்திருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

இலவசமாக வைத்திய சேவைகளும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படும் என வவுனியா சமித்தியினர் தெரிவித்தனர்.

இந்த திறப்பு விழா வைபவத்தில் பிரதி மாகாணசுகாதார பணிப்பாளர் டாக்டர் கே.கே. இளங்கோ,வவுனியா மாவட்ட ஆதார வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி. பவானி பசுபதிராசா, மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் ஏ. கேதீஸ்வரன் உட்பட இன்னும்பலர் கலந்து கொள்வர்.

வவுனியா மேலதிக அரச அதிபர் சி. இரகுநாத பிள்ளை தலைமையில் இந்த வைபவம் நடைபெறும். சமித்தியினால் அன்பு வழி என்னும் நூல் வெளியீட்டு விழாவும், இடம்பெறும்.

## நூல் வெளியீடு

இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையாவின் திருக்குறள் ஒழியியல் உரை விளக்க நூல் வெளியீடு 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயமண்டபத்தில் இடம் பெற உள்ளது.

வெளியீட்டு விழாத் தலைவர் அ.விஸ்வநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இலக்கண வித்தகர் இ.நமசிவாய தேசிகர் நூலை வெளியிட்டு வைப்பார். பிரமுகர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து கொள்வர். (க)

## தொலைபேசி மூலம் உரையாடல்

[அல்லைப்பிட்டி]

நெடுந்தீவின் அபிவிருத்தி பற்றி டக்ளஸ் தேவானந்தாவுடனான தொலைபேசி மூலம் உரையாடும் நிகழ்வொன்று 10, 11, 12 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது.

பன்முகப் படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நெடுந்தீவின் அபிவிருத்தி பற்றியே இவ்வுரையாடல் இடம் பெறும் என நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் ஏ. டபிள் யூ. அரியநாயகம் தெரிவித்தார். [க-46]

---

## (சாயி அருளமுதம்)

### ஆனந்தம்



உலகம் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கின்ற ஒன்று. ஸ்திரமாகவே இல்லாத இவ்வுலகில் நிரந்தரமான ஸ்திரமான ஒன்று இருக்கிறதென்றால் அது இறைவன் மட்டுமே. அப்படி நிரந்தரமானவரைப் பற்றிக் கொள்ளுங்கள். அவர் சொற்படி நடக்கத் துவங்குங்கள். அவர் அருகில் செல்ல முயற்சி செய்யுங்கள். எவ்வளவு அருகில் செல்லுகிறீர்களோ, அந்த அளவுக்கு அமைதியும், ஆனந்தமும் ஏற்படும். எவ்வளவு தூரம் இறைவனைப் பற்றி எண்ணுகிறீர்களோ, அந்த அளவுக்கு ஆனந்தமும் அடைகிறீர்கள். அன்பு இருக்கும் போது தான் நமக்குக் கஷ்டம் என்பதே தெரியாது.

## 'நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தும் நோக்குடனேயே குண்டு வைப்புகள்

### அனுருத்த ரத்வத்தை

அரசாங்கத்தின் செயற்பாடுகளை சீர்குலைய வைக்கும் நோக்குடனேயே இன்றைய குண்டுவெடிப்பு சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

இவ்வாறு அவசரகாலசட்ட நீடிப்பு பிரேரணை மீது பாராளுமன்றத்தில் பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கூறினார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல்அனுரத்தரத்வத்தை மேலும் பேசுகையில், நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணும் வகையில் இந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களை நாம் கண்டுவருகிறோம் அரசியல் ரீதியில் அரச அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்துவர ஏற்படும் விளைவுகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசசிங்கம் பேசுகையில் மட்டக்களப்பில் பாஸ்முறையை அமுல்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கூறினார்.

# யுத்தத்தில் தமிழ், சிங்கள இளைஞர் கொல்லப்படுவதை நிறுத்தவேண்டும்!

### பாராளுமன்றத்தில் ஈ. பி. டி. பி. ஜெகன்

(கொழும்பு)

இலங்கை மாதாவின் தமிழ் சிங்கள இளைஞர்கள் கொல்லப்படுகின்ற யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் கட்சி பேதம் இன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். இதுவே இந்நாட்டின் சமாதானத்திற்கு வழி வகுக்கும்.

இவ்வாறு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வி.கே. ஜெகன் தனது பாராளுமன்ற கன்னிப்பேச்சில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தமது உரையில் தெரிவித்துள்ளதாவது.

யாழ். குடாநாட்டு மீனவர்கள் தொழில் இல்லாது இருக்கும் போது நிரந்தர நிவாரணமும் அவர்களது பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான வலைகள் வள்ளங்கள் மற்றும் அணியங்களுக்கு நஸ்ட ஈடு வழங்க வேண்டும்.

யாழ்ப்பாண விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களான வாழைக் குலை, வெங்காயம் போன்றவற்றை உற்பத்தி செய்து பெருநட்டமடையும் நிலையை மாற்ற அப்பொருட்களை ஏற்றுமதி செய்ய ஆவன செய்யவேண்டும்.

போக்குவரத்தைப் பொறுத்தவரை சீரான கப்பல் போக்குவரத்து ஏற்படுத்தப்பட வேண்டும். விமானக் கட்டணம் வறிய மக்களால் ஈடுகொடுக்க முடியாதது எனவே யாழ்ப்பாணத்திற்கு ஒரு போக்குவரத்து மார்க்கத்தை சரியான முறையில் செய்துகொடுக்க வேண்டும்.

வன்னிக்கான நிவாரண வெட்டு நீக்கப்படல் வேண்டும் என்றும் வவுனியா-யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில்பாஸ் முறையை முற்றாக ஒழிக்க வேண்டுமென்றும் வடக்கு கிழக்கு தமிழர் பூர்வீகத் தாயகம் இதனை ஓர் அவாவாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்

## நாடுமுழுவதும் 2000நூலகங்கள் அமைக்க உலகவங்கி நிதியுதவி

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளில் 2000 நூலகங்கள் அமைப்பதற்கும் மேலும் 2000 நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு உலக வங்கி வழங்கவுள்ள நிதியுதவியான 96கோடியே 13இலட்சத்து 87ஆயிரம் ரூபாவில் கல்வி உயர்கல்வி அமைச்சு 12கோடியே 87 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவை நூலகங்களுக்கு அனைத்துப்புத்தகங்களும் வழங்குவதற்கு ஒதுக்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக இன்று கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன 300 அதிபர்களுக்கு பாடப் புத்தகங்களை வழங்கவுள்ளார்.

இசுறுபாயவிலுள்ள கல்வியமைச்சில் இடம் பெறும் நிகழ்விற்கு300அதிபர்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது அத்துடன் நூலகர்களை அவ்வப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களிலிருந்தே தெரிவு செய்யப்படுவர் இவர்களுக்கு பயிற்சியும் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. (4)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு 'மாதத்திற்கு நீடிப்பு!

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் 25 அதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

109 உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஈ.பி.டி.பி மற்றும் இ.தொ. காங்கிரஸ் கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவாகவும் ஐ. தே. கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கை முற்போக்கு முன்னணி ஆகிய கட்சி உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார செல்வம் அடைக்கல நாதன் ஆகியோரும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

ஐ. தேசியக் கட்சி மாற்றுக் குழு உறுப்பினர்கள் 5 பேரும் புளொட் உறுப்பினர்களும் விவாதத்தின் போது சபையில் சமுகமளித்து இருக்கவில்லை.

(வ-4)

### சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி - நல்லூர் வீதி பாணன்குளம் நாச்சியம்பாள் தேவஸ்தான சங்காபிஷேகமும் மணவாளக் கோலவிழாவும்இன்று 10ஆம் திகதி இடம்பெறவுள்ளது. [க]

### கலந்துகொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் எதிர்வரும் (12-02-2000) சனிக்கிழமை இலவசமாக இடம்பெறும் ''அக்கினிப் பெருமூச்சு'' காணாமல் போனோர் தொடர்பான நாடகத்தில் வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுகாணாமற் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் ப. செல்வராசா கேட்டுள்ளார் (4)

### மட்டக்களப்பு---

தின் பேரில் இதற்கென வைக்கப்படும் குறிப்புப் புத்தகத்தில் ஒப்பமிட்டு பகலில் மீன்பிடிக்க செல்லலாம்என்று முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

### யுத்தத்தினால்---

டுள்ளது.

பாதயாத்திரை மூலம் சேரும் நிதியுத்தத்தின் போது கொல்லப்பட்ட, அங்கவீனமடைந்த படைவீரர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (வ)

### அரசின்---

டாவது வாசிப்பின் மீதான வாக்கெடிப்பு 25ஆம் திகதி மாலை 6.00மணிக்கும் நடைபெறும்.

வரவு செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதம் எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளிலும் மார்ச் 1,2,3,6,7,8,9, 10,13,14,15,16,20,21,22 23,24ஆம் திகதிகளில் நடைபெறுவதோடு மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு 24ஆம் திகதி மாலை 6.00மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### உதைபந்தாட்டம்

யாழ். பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்தவிளையாட்டுக் கழகங்களுக்குஇடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று வியாழன் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு பாடுமீன் விளையாட்டுக்கழகம் எதிர் குருநகர் விளையாட்டுக்கழகம். பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகும்.

## குருநகர் மத்திய மருந்தகத்தில் 47 ஆயிரத்து 463 பேருக்கு சிகிச்சை

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் குருநகர் மத்திய மருந்தகத்தில் கடந்த ஆண்டு 47 ஆயிரத்து 463 பேருக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்களை இனம்கண்டு சிகிச்சை வழங்கப்பட்டோர் 260 பேராவர்.

மற்றும் வயிற்றோட்ட நோய்க்கு 232 பேருக்கும் சிகிச்சையளிக்கப் பட்டுள்ளது.

இங்கு விசர்நாய் கடியினால் பாதிப்புற்ற ஒருவரும் ஏனைய கட்டாக்காலி நாய்கடியினால் பாதிக்கப்பட்ட 10 பேரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அரசினால் அனுப்பப்பட வேண்டிய முதல் காலாண்டுக்கான மருந்து இன்னமும் அனுப்பப்படவில்லை எனவும் இதனால் நோயாளர்கள் பெரும்பாலான மருந்தை வெளியில் பணம் கொடுத்துப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(க-59)

### பங்களாவீதி திருத்தப்பட வில்லை

(சாவகச்சேரி)

மீசாலையையும் கெருடாவிலையும் இணைக்கும்,பங்களாவீதி பல வருடங்களாக திருத்தப்படாத நிலையிலே காணப்படுகிறது.

## குடாநாட்டில் இளைஞர் கைது குறித்து மனிதஉரிமை ஆணைக்குழுவிடம்முறையீடு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களின் போது படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் குறித்து அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு;-

பொன்னுத்துரை சசிகுமார் (வயது-23) நீர்வேலி.

சின்னத்துரை சசிகரன் (வயது - 24) ஆனைக்கோட்டை.

மகாதேவன் மதிவதனன் (வயது-25) அரியாலை.

கந்தையா கமலதாஸ் (வயது-24) கொக்குவில்.

கந்தையா கமலநாதன் (வயது-22) கொக்குவில்.

இவர்களுள் கந்தையா கமலநாதன் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் பொன்னுத்துரை சசிகுமார் என்பவர் கைதுசெய்யப்பட்டது தொடர்பான பற்றுச்சீட்டு எதுவும் உறவினர்களிடம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

### யாழ்ப்பாணத்தில்...

பிகைபாகன் றிஜிகேசன் [வயது17)என்பவரும் நேற்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவராவார்.

இவர்கள் இருவரையும் இராணுவம் கைதுசெய்தமை தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியிடம் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### நிர்வாகக் குழு தெரிவு

இமையாணன் அமெரிக்க தமிழ்க் கலவன் வித்தியாலய புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில்இடம் பெற்றது.

தலைவர் மு.மார்க்கண்டு, செயலாளர், சி.வசந்தகுமார். பொருளாளர் கு. கணேசலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-27)


ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
ரகுமான், விஜயசாந்தி
நடித்த
சூர்யோதயம்
10. 30, 2. 30 (ப.நே)
மகளிருக்கு இடமுண்டு
(00115)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு.நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்**

**(உரிமையாளர் கலைவாணி நகை மாளிகை கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.)**

| தோற்றம் | நிறைவு |
| --- | --- |
| 27 - 12 - 1936 | 17 - 01 - 1994 |

எங்கள் குடும்பத் தலைவராகவும், குல விளக்காகவும் இருந்த உங்களை இழந்தோமே அப்பா... அன்பு, பாசம், நேசத்துடன் வழி நடத்திய எம் அன்பு தெய்வமே! கல்வியும், செல்வமும் வழங்கி எம்மை ஆளாக்கினீர்கள் நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆறு ஆண்டுகள் ஆனாலும் எம் இதயங்களில் என்றும் வாழ்கின்றீர்கள் இன்றும் அன்புடன் நாம் உங்களை நினைவு கூருகிறுன்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்

தகவல்
திருமதி. றஞ்சினி சிவசுப்பிரமணியம்.
மனேச்சர் சோ. நாகராசா
136/1 நாவலர் வீதி, யாழ்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.